என்றும் கிடைக்கப்பெற்றன. அதிலிருந்து பல்லவர்கள் ஆண்ட காலத்தில் ரோம் நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அந்தப் பொருள்களை வைத்துத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேலும் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : பேறிஞர் அண்ணா அவர்கள் இருந்த பொழுது கூட இதைப் பல முறை சொல்லியிருக்கிறார். பல்லவ நாகரிகப் பொருள்கள், சின்னங்கள் எல்லாம், காஞ்சிபுரத்தில் இருந்து பாலாறு ஓடுகிற பகுதியெல்லாம் எத்தனையோ புதைப் பொருள்கள் இருப்பதாகவும், இதையெல்லாம் நாம் தோண்டிப் பார்த்து, நம்முடைய பழைய சிறப்புகளை கண்டுபிடிக்கவேண்டும் என்று சொன்னதின் விளைவாக, இப்பொழுது ஓரிரண்டு பொருள்கள் வசவ சமுத்திரத்தில் கிடைத்திருக்கின்றன. எப்படி மொகஞ்சதாரா, ஹரப்பா முதலிய சின்னங்களைத் தோண்டிப் பார்த்து திராவிடர்களுடைய நாகரிகத்தைக் கண்டு பிடித்தார்களோ, அம்மாதிரி இங்கும் கிடைக்கக்கூடும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம்முடைய ஆர்கியாலாஜிகல் டிபார்ட்மெண்டு மூலமாக, பால்டிமார் போன்ற நிபுணர்களின் உதவியையும், அறிவையும் கொண்டு, இதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் பல்லவ மேடு என்ற பகுதியிலே தொல் பொருள் ஆராய்ச்சித்துறையினர் ஆராய்ச்சி நடத்திவருகின்றனர். வசவ சமுத்திரத்தில் சில பொருள்கள் கிடைக்கின்றன. பாலாறு முகத்துவார பகுதி பல்லவர் காலத்தில் ஒரு துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும் என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் விளைவாக. பக்கத்தில் வயலூரில் ஒரு கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 8-வது நூற்றாண்டு பல்லவ காலத்தைப்பற்றிய குறிப்புகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை வெளி நாட்டு வாணிபங்களைப் பற்றியவை. அதைப்பற்றி சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அதை வைத்து பார்க்கிறபொழுது, வசவசமுத்திரம் ஒரு காலத்தில் துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும். தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் பாலாறுப் பகுதிகளில் இதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். இந்திய ஆராய்ச்சித் துறையினரும் காஞ்சிபுரத்தில் ஆராய்ந்து கொண்டு வருகின்றனர்.

மதுரையில் டிராக்டர்களுக்கான பணிக்களரி

*254 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாய உற்பத்திக்கு உதவியான உழுகருவிகள், டிராக்டர்கள், ஜீப்கள் இதரவைகளை பழுது பார்க்கும் திறமையான

1970 மார்ச் 7]

தொழிற்சாலையாக மதுரையில் உள்ள அரசின் தொழிற்சாலைகள் (வசந்தநகர் சமீபம், கலெக்டர் அலுவலகம்) இரண்டையும் விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து: இந்த அலுவலகங்களை விரிவுபடுத்துவதற்கு எந்தச் செயற்குறிப்பும் இல்லை. எனினும், மதுரையில் டிராக்டர் தயாரிக்கும் பணிக்களரி ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொடக்க ஏற்பாடுகள் முடிவுற்று, இப்பணிக்களரி விரைவில் செயல்படும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மதுரை நகரத்தில் இரண்டு அரசினர் தொழில் பேட்டைகள் இருந்தும், நமது பஞ்சாயத்து யூனியனில் சில டிராக்டர்கள், மருந்து அடிக்கும் கருவிகள் பழுது அடைந்தால், அவைகளைச் சரி செய்வதற்குத் தனியார் தொழிற்சாலைகளுக்குக் கொண்டுபோகவேண்டியுள்ளது. இதனால் வீண் கால தாமதமும், பண விரயமும் ஆகிறது. இந்தத் தொழிற்சாலைகளை துரிதமாக நல்ல முறையில் இயங்கும்படி அபிவிருத்தி செய்து விஸ்தரித்தால், பண விரயமும் குறையும், யூனியன் வேலைகளுக்கும், விவசாய வேலைகளுக்கும் உதவியாக இருக்கும். துரிதமாக இதை, நல்ல தொழிற்சாலையாக மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏறத்தாழ எல்லா வேலைகளும் முடிவுற்று, விரைவிலே துவக்க விழா நடைபெறும்.

DR. H. V. HANDE: Sir, while we are glad that there is a factory there, will the Hon. Minister be pleased to tell the number of persons employed in this factory and the number of persons likely to be employed? Because of the increased demand for tractors, may I know whether this Government have also taken into consideration the fact that the production of tractors in Tamil Nadu is very imperative to solve the employment problem of thousands of unemployed persons?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கேள்வி இப்பொழுது இருக்கிற பணிக்களரிகளை விஸ்தரிக்க முடியுமா என்பது குறித்துதான். அதில் எத்தனை பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது பற்றிய குறிப்பு எதுவும் இப்பொழுது இங்கு இல்லை. தனிக்கேள்வி போட்டால், உரிய பதில் தரமுடியும்.

Fertiliser Inspectors.

* 255. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(a) whether the Government have any proposal to train block extension officers as fertiliser inspectors; and

(b) if so, the details thereof?